## எல்லாம் இயேசுவே

எல்லாம் இயேசுவே, எனக்கெல்லாம் இயேசுவே
தொல்லை மிகு இவ்வுலகில் துணை இயேசுவே

ஆயனும், சகாயனும், நேயனுமுபாயனும்
நாயனும், எனக்கன்பான ஞான மணவாளனும்

தந்தை தாய், இனம் ஜனம் பந்துள்ளோர், சிநேகிதர்
சந்தோஷ, சகல யோக சம்பூரண பாக்யமும்

கவலையிலாறுதலும் கங்குலிலென் ஜோதியும்
கஷ்ட நோய்ப்படுக்கையிலே கைகண்ட ஔஷதமும்

போதகப் பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங் கூட்டாளியுமென் தோழனும்